உ

கணபதிதுணை.

சிவசுப்பிரமணியர்துணை.

தேரையர் அருளிச்செய்த

நீர்நிறக்குறி நெய்க்குறிச்

சாஸ்திரங்களின் மூலமும்.

உரையாசிரியராகிய

கா-சபாபதிமுதலியாரவர்கள்

இயற்றிய உரையும்.

சிதம்பரம் தளவரிசை ஆயுள்வேதபாஸ்கர

சுப்பிரமணியபண்டிதரவர்கள்

பார்வையிட்டு,

சென்னபட்டணம் ஏஷியாடிக் அச்சுக்கூடத்தில்

பதிப்பித்தனர்.

கலியுகம் - சகூஎய-ல் - நிகழாநின்ற

விபவ௵ ஆவணி௴.

Registered Copy-right.

விளம்பரம்.

பதிப்பித்திருக்கும் புத்தகங்கள்.

இப்புத்தகம்-க-இ-ரூ-உ-யும்-ஜீவரக்ஷாமிருதம் புத்தகம்-க-இ-ரூ-எஉ-யும்-பதார்த்தகுணசிந்தாமணி புத்தகம்-க-இ-ரூ-ங-ம்-தைலவருக்கச்சுருக்கம் புத்தகம்-க-இ-ரூ-கஉ-யும் ஆ- வேண்டியவர்கள் சென்னபட்டணம் பெத்துநாயக்கன் பேட்டையில் அருணாசலீஸ்வரர்கோயிலுக்கடுத்த அண்ணாபிள்ளைத்தெருவில் வடவண்டைவாடையில்-எச-வது கதவுநெம்பருடைய வீட்டிலிருக்கும்-ம-ா-ா-ஸ்ரீ-சி-த-சுப்பிரமணிய பண்டிதர் அவர்களிடத்தில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

இப்போது பதிப்பித்துவரும் புத்தகம்.

சாரசங்கிரகம் என்னும் வைத்திய அகராதி ... ❋

இனி உடனே பதிப்பிக்கப்படும் புத்தகங்கள்.

சிகிச்சாசாரசங்கிரகம்.
சரீரவினாவிடை.
பாகசாஸ்திரம்.
பிரதானகுணமூலித்தரு.
நாடிக்கொத்து.
விஷப்பிரதிவிஷம்.
முதலிய சாஸ்திரங்கள்.

உ

கணபதிதுணை.

சிவசுப்பிரமணியர் துணை.

தேரையர் அருளிச்செய்த

நீர் நிறக்குறிச் சாஸ்திரம்

மூலமும் உரையும்.

கடவுள் வணக்கம்.

சூத்திரம்.

ஒருதிருப்பிரணவத்துதித்தகாரிய னை
ஓத்தின்முன்மொழிக்குரையுரைத்தவாரியனைக்
கருணையினுதவியகவுரிதன்பாக ன்
கருதரும்பெரும்பெயர்க்கடவுடனுக ளை
நிறப்பதுமச்சரணெஞ்சிலிருத் தி
நிறக்குறியியலினைநிலவப்புகல்வா ம்.

பதவுரை. ஒருதிருப்பிரணவத்து - ஒப்பில்லாத தெய்வத்தன்மை பூண்டுள்ள பிரணவமந்திரத்தி னிடமாக - உதித்த காரியனை - உற்பவமாகிய விநாயக மூர்த்தியையும் - ஓத்தின் முன்மொழிக்கு - வேதத்தின் முதன் மொழியாகிய பிரணவத்துக்கு - உரையுரைத்த வாரியனை - பொருள் சொல்லிய குருவாகிய சுப்பிரமணிய சுவாமியையும் - கருணையின் கிருபையினால், உதவிய

தந்தருளிய-கவுரிதன்பாகன்-பார்வதி பாகனாகிய பரம சிவனுடைய-உகள நிறப்பதுமசரண் - செம்மை நிற முள்ள தாமரைமலர்போன்றஇரண்டு திருவடிகளையும்- நெஞ்சில் இருத்தி - எம்முடைய இருதயத்தில் வைத் துக்கொண்டு-நிறக்குறி யியலினை-நீரி னிறக்குறி இலக் கணத்தை - நிலவப்புகல்வாம்-யாவருக்கும் விளங்கும் படி சொல்லுவாம் - என்றவாறு.——பொழிப்புரை, பிரணவத்தினிடமாக உற்பவமான விநாயகமூர்த்தியை யும், பிரணவத்துக்குப் பொருளுரைத்த சுப்பிரமணிய சுவாமியையும் பார்வதிபாகனாகியபரமசிவனையும், தியா னித்து-நீரினது நிறக்குறியை யாவருக்கும் விளங்கும் படி சொல்லுவாம்.

சுபாவதேகிக்குறிநீரிலக்கணம்.

அருந்துமாகாரமுமவிரோதம தா
யஃகலலர்தலகாலவூண்டவிர்ந்தழ ற்
குற்றளவருந்தியுறங்கிவைக றை
யாடிக்கலசத்தாவியேகாதுபெ ய்
தொருமுகூர்த்தக்கலைக்குட்படுநீ ரி
னிறக்குறிநெய்க்குறிநிருமித்தல்கட னே.

இ-ள், அருந்தும்-உண்ணுகின்ற-ஆகாரமும் - அரு ந்தவைப்பதார்த்தங்களும் அவிரோதமதாய்-விரோதமில் லாததாய்-அஃகல்-சுருங்குதலும்-அலர்தல்-விரிதலும்-

அகாலஊண்-காலமல்லாத காலத்திலுண்ணுமுணவும்-த்விர்ந்து-நீங்கி-அழற்கு-சடராக்கினிக்கு-உற்றஅளவு-பொருந்தியபிரமாணத்துக்கு-அருந்தி-உண்டு-உறங்கி-நித்திரை செய்து-வைகறை-விடியற்காலத்தில் - ஆடிக்கலசத்தில் - படிகபாத்திரத்தில் ¶ ஆவியேகாது-நீரினத்ஆவிபோகாமல் - பெய்து-விட்டு - ஒரு முகூர்த்தநாழிகைக்குட்படுநீரில்-ஒருமுகூர்த்தநாழிகைக்கு உட்பட்ட நீரில் - நிறக்குறி-நிறக்குறியும் - நெய்க்குறி-எண்ணெய்க்குறியும் - நிருமித்தல்-கண்டு நிச்சயித்தல் - கடன்-முறைமையாம் - எ-று.——பொ-ரை, உண்ணுகின்ற அறுசுவைப்பதார்த்தங்களும் விரோதப்படாமல், குறைதலும் அதிகரித்தலும், காலந்தப்பிப்புசித்தலும்; நீங்கி, தீபனத்துக்குப் பொருந்திய அளவு புசித்து; நித்திரை செய்து; விடியற்காலத்தில் படிக பர்த்திரத்தில் ஆவி போகாதவண்ணம் பெய்து; ஒருமுகூர்த்தம் என்கிற (௩¾) நாழிகைக்குட்பட்ட நீரில்; நிறக்குறியும், எண்ணெய்யின் குறியும்பார்த்து; ரோகங்களை நிச்சயித்தல் முறைமையாம்.—கிரமமாகப்புசித்து நித்திரை செய்து விடியற்காலத்தில் அந்தநீரைக்களசில் பெய்து அதில் காணப்படுகிற நிறக்குறியைக்கண்டும், அன்றியும் - வுங்

¶ ஆவியாவது - அந்நீரின் சுடுகை.

நீரில் எண்ணெய்யை விட்டுப் பார்த்துக் காணப்படுகிற குறியை நிதானித்தும், சாத்தியா சாத்திய ரோகங்களை நிதானிக்க வேண்டு மென்பது தாற்பரியம். (க)

நோய்த்தேகிக் குறிநீரிலக்கணம்.

அருப்பமுற்றார்க்கவ்விதிவிலக் கே.

அருப்பமுற்றார்க்கு - மிகவும் நோயை யுடையவருக்கு-அவ்விதி முற்சூத்திரத்திற்கூறியவிதிகள் விலக்கு-விலக்குதலாம்-எ-று. ——பொ-ளை, அறுசுவைபதார்த்தங்கள்விரோதமின்றிஉண்ணல்முதல்நித்திரைசெய்தல் ஈறாகியஐவகைவிதிகளும் நோயாளருக்கு அமையாவாதலால் அவ்விதிவிலக்கெனச்சுட்டினார்.

நீரின் பொதுக்குணம்.

வந்தநீர்க்கரியிடைமணநுரையெஞ்சலெ ன்
றைந்தியலுள்ளவையறைகுதுமுறை யே.

இ-ள், வந்தநீர்க்கு-வருகின்ற நீரினுக்கு-அரி-நிறம்-இடை-நிறை - மணம்-நாற்றம் - நுரை-நுரை-எஞ்சல்-குறைதல்-என்று-என்று-ஐந்து இயலுள-ஐந்து இலக்கணமுள்ளன - அவை-அவற்றை-முறை - முறையாக-அறைகுதும் - சொல்லுகிறோம்-எ-று. ——பொ-ளை, நீருக்கு-நிறம் - இடை - நாற்றம் - நுரை - குறைதல்-என்று - ஐந்திலக்கணமுண்டு. அவ்வகளை ஒவ்வொன்றாகப் பிரித்துச் சொல்லுகிறோம். (உ)

நிறத்தொகை.

பீதஞ்செம்மைபைகருமைவெண்மையெ ன்
றோதைங்கொழுமையையொத்துகுநீ ரே.

இ-ள், பீதம்-மஞ்சள்-செம்மை-சிவப்பு-பை-பச்சை-கருமை-கறுப்பு - வெண்மை-வெள்ளை-என்று-என்று-ஓது-சொல்லுகிற - ஐங்கொழுமையையொத்து - ஐந்து நிறத்தைப்பெற்று - உகும்நீர் - நீர்இழியும்-எ-று.——பொ-ள், நீரானது மஞ்சள்-சிவப்பு-பச்சை-கறுப்பு-வெள்ளை-யென்னும் தனித்தனி ஐந்து நிறமுள்ளதாயிறங்கும். (௩)

இவற்றுள்.

அரிசனத்தாறுமருணத்துணன் கு
மரிதத்தைந்துமஞ்சனத்தொருநான்கு ம்
வெண்மையுளிரண்டுமாய்விள்ளுஞ்சுருதி யே.

இ-ள், அரிசனத்தாறும்-மஞ்சள் நிறத்திலாறுவகையும் - அருணத்துணன்கும் - சிவப்பு நிறத்துள் நாலுவகையும் - அரிதத்தைந்தும் - பச்சை நிறத்திலைந்துவகையும்-அஞ்சனத்தொரு நான்கும்-கருமைநிறத்தில் நாலுவகையும் - வெண்மையுளிரண்டுமாய் - வெள்ளை நிறத்தி லிரண்டுவகையுமாக - சுருதிவிள்ளும் - ஆயுள் வேதஞ்சொல்லும்-எ-று.——பொ-ள், மஞ்சள்நிறத்திலாறுவகையும் - சிவப்புநிறத்தில் நாலுவகையும்-

பச்சைநிறத்தி லைந்துவகையும் - கருமைநிறத்தில் நாலு வகையும் - வெள்ளைநிறத்திலிரண்டுவகையுமாக ஆயுள் வேதஞ்சொல்லுகின்றது. (சு)

மஞ்சள்நிறநீர் விகற்பம்.

மஞ்சணீர்விகற்பவன்னம்புகலுது ம்.

இ-ள், மஞ்சள் - மஞ்சள் நிறமுள்ள - நீர்-நீரினது- விகற்பவன்னம் - பேதவர்னத்தை - புகலுதும் - சொல்லுகிறோம்-எ-று.——பொ-ள், மஞ்சள்நிறமுள்ளதாக இறங்குகின்ற நீரில் காணப்படுகிற வன்னபேதத்தைச் சொல்லுகிறோம். (ரு)

சீரணஅபக்குவநீர்.

நீரணும்வழுதுகுநீத்தநிறமெனி ற்

சீரணக்குறைவினபக்குவநீ ரே.

இ-ள், நீரணும் - மழைநீர் முதலிய நீரைப்பொருந்திய - வழுதுகு-வைக்கோலிலிருந்து சிந்துகின்ற - நீத்தம்-சலத்தினுடைய - நிறமெனின்-நிறமிருக்குமானல்- சீரணக்குறைவின் - சீரணக்குறைவாகிய-அபக்குவநீர்- அபக்குவத்தினல் உண்டாகும் நீராம்-எ-று. பொ-ள், மழைநீர் முதலிய நீரால் நனைந்தூறிய வைக்கோலிலிருந்து ஒழுகாநின்ற சலத்தினிறமா யிருக்குமானல், அசீரணமாகிய அபக்குவத்தால் உண்டாகும்நீராம். (சூ)

சீரணபக்குவநீர்.

பாரிற்றுரிஞ்சிப் பழநிறம்பொருந்தி ற்
சீரணபக்குவ நீரொனத்தே ரே.

இ-ள், பாரில்-இவ்வுலகத்தில் - துரிஞ்சிப்பழநிறம்-கொளுஞ்சி நாரத்தம் பழத்தினது நிறத்தை- பொருந்தில் ஒக்குமாஞல்-சீரணபக்குவம்-சீரணபக்குவத்திஞலுண்டான-நீரொனத்தேர்-நீரொன்று அறிந்துகொள்ளக்கடவை-எ-று.——பொ-ளை, நீர் துரிஞ்சிப்பழ நிறத்தைப்பொருந்துமாஞல்சீரணபக்குவத்திஞலுண்டானதென்று அறிந்துகொள்ளவும். (எ)

உட்டின மிகுதியாலுண்டாகும் நீர்.

செம்மையுநிசியுஞ்சேர்ந்தெழுநிறமெனி ன்
வெம்மையுயரவிளைந்தவிர்நீ ரே.

இ-ள், செம்மையும்-சிவப்பும் - நிசியும்-மஞ்சளும்-சேர்ந்து-கலந்து-எழு-உண்டாகின்ற-நிறமெனின்-வர்னமாஞல்-வெம்மை உட்டினமானது - உயர-அதிகரித்தலால் - விளைந்து - உண்டாகி - அவிர்நீர் விளங்குகின்றநீராகும்-எ-று.——பொ-ளை,நீர்-மஞ்சள்நிறமாயிருப்பதுடன் சிவப்பு நிறமுஞ்சேர்ந்து வருமாஞல் உட்டினம் அதிகரித்தலால் உண்டானநீராகும். (அ)

உட்டினத்தைக்கொடுக்கும் நீர்.

காட்டினரந்திக்கனிநிறங்காணி ற்
சூட்டைத்தாற்குத்தொடுகுறிநீ ரே.

இ-ள், காட்டின் - காட்டினிடத்திருக்கும் - நரந்தக் கனிநிறம் - நாரத்தம்பழநிறம் - காணில் - தோற்று மானல் - சூட்டைத்தரற்கு-உட்டினத்தைக் கொடுப்ப தற்கு - தொடுகுறிநீரோ - உண்டான குறியை யுடைய நீராம்-எ-று.——பொ-ா, காட்டுநாரத்தம்பழத்தோல் நிறந்தோன்றுமானல் சூட்டைக்கொடுப்பதற்கு உண்டான நீராம். (ரு)

அதியுட்டின நீர்.

கொதியனனிறத்தின்கொள்கையேயா யி
னதியுட்டினத்தையடைந்தநீரா மே.

இ-ள், கொதி-கொதிக்காநின்ற-அனல் நிறத்தின்கொள்கையேயாயின்-அக்கினி நிறத்தன்மையையுடையதாகத்தோன்றுமானல்-அதியுட்டினத்தைஅடைந்தநீராம்-மிகுந்த உட்டினத்தைப் பொருந்திய நீராகும்-எ-று.—பொ-ா, தீயினிறத்தைப் பொருந்தி யிழியுமானல் மிகுந்த சூட்டினைப் பொருந்திய நீராகும். (ய)

முன்னிலும்அதியுட்டின நீர்.

பீதமுங்குங்குமப்பூவுமாரெழிற ரி
னேதிதன்மேல்வெப்பின்றெனுநீ ரோ.

இ-ள், பீதமும் - மஞ்சள் நிறமும் (அதில்) குங்குமப்பூ-குங்குமப்பூவி னிறமும் - ஆர்-வரிவரியாகப்பொருந்திய- எழிறரில்-நிறத்தைதருமானல்-ஏதிதன்மேல்

வெப்பு-இதற்குமேலே உட்டினமேது - இன்றெனும்-இல்லையென்று சொல்லத்தக்க - நீர்-நீராகும்-எ-று.— பொ-ள், மஞ்சள்நிறமும்-அதில் அளாத்தகுங்குமப்பூ நிறமும் - வரி வரியாகப் பொருந்தி யிருக்குமானல் இதற்கு மேலாக உட்டின மில்லை யென்று சொல்லத்தக்க நீராம். (கக)

மஞ்சள்நிறநீர் விகற்பம் ஆறும் முற்றியது.

செம்மைநிற நீர் விகற்பம்.

செம்மைநீர்விகற்பச் செய்திநவிற்றுவா ம்.

இ-ள், செம்மைநீர் - சிவப்புநிறமுள்ள நீரினது-விகற்பச்செய்தி - பேதக்கூறுபாட்டினை -நவிற்றுவாம்-சொல்லுகிறோம்-எ-று——பொ-ள், சிவப்பு நீரினதுபேதத்தைச்சொல்லுவாம். (கஉ)

உதிரம்பொங்கிய நீர்.

அரத்தமுங்கருமையு மண்ணியகறைத ரி
னிரத்தம்பொங்கலா னிறங்கியநீ ரே.

இச்சூத்திரம் மேற்கூறியதைவகுத்துக்காட்டுகின்றது.

இ-ள், அரத்தமும்-சிவப்பும்-கருமையும்-கறுப்பும்-அண்ணிய-பொருந்திய - கறைதரின்-நிறத்தைக்காட்டுமானல்-இரத்தம்பொங்கலால்- உதிரம்பொங்குதல்லால்-இறங்கியநீர்-இறங்குகின்ற நீராம்-எ-று.——பொ-ள், சிவப்பும்கறுப்பும்கலந்த நிறத்தைக்காட்டுமானல்-இரத்தம் பொங்குதலால் உண்டாகும்நீராம்.

அதிக உதிரம்பொங்குதலாலுண்டாகும் நீர்.

செக்கச்சிவந்த பன்னீர்ப்பூப்புகருறின்
மிக்குதிரக்கொதிப்பாலுகுநீரே.

இ-ள், செக்கச்சிவந்த பன்னீர்ப்பூப்புகருறின்-மிகுந்த சிவப்பாகிய பன்னீர்ப்பூ நிறம் பொருந்துமானல்-மிக்குதிரக்கொதிப்பால் - மிகுந்த இரத்தக் கொதிப்பினல் - உகும் நீர் - சிந்துகின்ற நீராகும்-எ-று.—பொ-ளை, மிகுந்த சிவப்புநிறமுள்ள பன்னீர்ப்பூ நிறத்தைப்பொருந்துமானல் அதிக ரத்தக் கொதிப்பினல் இறங்கும் நீராம். (கச)

முன்னிலும் அதிகமாகப்பொங்குதலாலுண்டாகும் நீர்.

கருமையுட்செம்மைசேர்கறையுஞ்சிவப்புங்
குருதிபொங்கிய குறிபுகனீரே.

இ-ள், கருமையுள்-கறுப்புநிறத்துள்-செம்மைசேர்-கொஞ்சம் சிவப்புநிறஞ்சேர்ந்த-கறையும்-நிறமும்-இவ்விரண்டுமன்றி-சிவப்பும்-தனியாகிய அதிக சிவப்புநிறமும் - உண்டாயிருக்குமானல் - குருதிபொங்கிய உதிரம்பொங்கிய - குறிபுகல்நீர் -குறியைச் சொல்லுகிற நீராம் எ-று.—பொ-ளை, கறுப்பும்அதில்கொஞ்சம்சிவப்புங் கலந்த நிறமும் இவைகளை யன்றி தனியே அதிக சிவப்புநிறமும் உண்டாயிருக்குமானல் உதிரம்பொங்கிய குறியைச்சொல்லுகிற நீராம். (கரு)

செம்மைநீர்விகற்பம்நான்கும் முற்றியது.

பச்சைநிற நீர் விகற்பம்.

பச்சைநீர்விகற்பம் பன்னுதுமிவ ணே.

இ-ள், பச்சைநீர்-பச்சை நிறமுள்ளநீரினுடைய-விகற்பம்-பேதத்தை - பன்னுதுமிவணே-இங்கு சொல்லுகின்றோம்——பொ-ணா, பச்சைநீரின் பேதத்தைச் சொல்லுகிறோம். (௧௬)

சீதள நீர்.

கருமைச்சாமளக் கருவுறுமாயி ன்
வருசீதளத்தால் வரப்படுநீ ர்.

இ-ள், கருமைச்சாமளக் கருவுறுமாயின்-கறுப்போடுங்கூடிய பச்சைநிறம் பொருந்துமானல்-வருசீதளத்தால் - உண்டாகிக்கொண்டிருக்கின்ற சீதளத்தினல்-வரப்படுநீர்-வருகின்றநிராம்-எ-று.—பொ-ணா, கறுப்பு நிறத்தையும் கொஞ்சம் பச்சைநிறத்தையும்பொருந்துமானல் சனித்துக்கொண்டிருக்கிற சீதளத்தினல் வருகின்ற நீராம். (௧௭)

விஷத்தாலுண்டாகுஞ் சீதள நீர்

இடத்துறுகுணத்தையேய்க்குமெனி லோ
விடத்துறுசீதள மேவிடுநீ ர்.

இ-ள், இடத்துறு * ஆகாயத்திற் பொருந்திய-குணத்தை - நிறத்தை - ஏய்க்குமெனிலோ - ஒத்திருக்குமானலோ - விடத்து - விஷத்தினல் - உறு-பொருந்

திய - சீதளம்-சீதளமானது - மேலிடுநீர் - மேலிட்ட நீராம்-எ-று ——பொ-ளை, ஆகாய நிறத்தையொத்திருக்குமானல் - விஷத்திஞலுண்டான சீதளமேலிடுதலாலுண்டாகும்நீராம். * ஆகாயநிறம் ஒருவிதநீலநிறம். ஈண்டுக்கூறியவிஷமாவது - கிருத்திரமவிஷம் - அகிருத்திரமவிஷம் - என இருவகைப்படும், இவ்விரண்டில் கிருத்திரமவிஷமாவது நாபிமுதலிய பூண்டுகளையாவது பாம்புமுதலிய செந்துக்களின் விஷங்களையாவது-மற்ருெருவஸ்துவிற்கலந்து கொடுக்கப்படுவதாம். இது இடுமருந்தென்றும் சொல்லப்படும். அகிருத்திரம விஷமாவது-தாவரவிஷம் - சங்கம விஷம் - என இருவகைப்படும் - இவற்றுள் தாவரவிஷமாவது - பூண்டு-செடி-கொடி-புல்-விருக்ஷம்-ஆகியஇவைகளின்கிழங்கு-வேர்-பட்டை- பால்-பிசின்-இலை-பூ-காய்-கனி-முதலிய வஸ்துகளிலும் பாஷாணமுதலிய தாதுக்களிலும் இருக்கின்ற விஷமாம். சங்கமவிஷமாவது - சர்ப்பம்-கீடம்-தேள் - சிலந்திப்பூச்சி - நாய்-நரி - முதலியவைகளால் வருகின்ற விஷமாம். (௰அ)

மிகுசீதள நீர்.

தகுமொருநீலச்சாயைகண்டிடி — னே
மிகுசீதளத்தால்விளைநீரிதனு — ல்
மருத்துநோய்பாலிருத்தார்க்குமா — மே.

இ-ள், தகுமொருநீலச்சாயை-தக்கதான ஒருவிதநீல நிறம் - கண்டிடினே - கண்டாலோ - மிகு சீதளத் தால் - மிகுந்த சீதளத்தினால் - விளைநீர் - உண்டாகும் நீராம். இதனால்,மருத்துநோய்-வாதநோயானது -பால விருத்தர்க்குமாம்- பாலர்களுக்கும் விருத்தர் களுக்கும் உண்டாகும் - எ-று.——பொ-ளை, நீரில்-ஒருவிதநீலச் சாயை காணுமானால் மிகுந்த சீதளத்தி லுண்டாகும் நீராம். இந்நீரினால்-பாலர்களுக்கும்-விருத்தர்களுக்கும் வாதரோகமுண்டாகும். (௰௯)

வாதபித்த கபங்களைக் கெடுக்கும் நீர்.

அம்மநீலத்துருவார்ந்துந்தடிக்குமே ன்
மும்மலச்சிதைவைமுளைப்பிக்குநீ ரே.

இ-ள், நீலத்துரு-நீலநிறம் : ஆர்ந்தும் - பொருந்தி யிருப்பதுமன்றி-தடிக்குமேல்-தடித்து மிருக்குமானால்- மும்மலம் - வாத - பித்த சிலேஷ்மங்களி னுடைய- சிதைவை-கெடுதியை - முளைப்பிக்கும் நீர் - உண்டாக் கும்நீராம்-எ-று.——பொ-ளை, நீலநிறம் பொருந்தி யிருப்பதுமன்றி, தடித்து மிருக்குமானால், வாதபித்த கபங்களுக்குக் கெடுதியை உண்டாக்கும் நீராம். மும்மலச் சிதைவாவது - வாதம் - பித்தம் - கபம் என்னு மிவைகளி னிலைகெடுதல் (அம்ம-முன்னிலை- அசைநிலை.) (௨௰)

மேற்கூறிய மும்மலங்களை மிகவுங்கெடுக்கும் நீர்.

சொக்கிலைப்பச்சையின் றோற்றமுளதே ல்
மிக்குமும்மலங்கெட விழுநீர்கொடி தே.

இ-ள். சொக்கிலைப்பச்சையின்-சொக்கமான இலைப் பச்சைபோல - தோற்றமுளதேல் - நிறம் உண்டா யிருக்குமானால் - மிக்கு-மிகுதியாக - மும்மலங்கெட- வாத பித்த சிலேஷ்மங்க ளென்பவை கெடுவதற்காக- விழுநீர் - விழுகின்ற நீராம்-எ-று.——பொ-ள், சொக் கமான இலைப்பச்சைபோலநிறமுள்ளதாயிருக்குமானல் வாதபித்த சிலேஷ்மங்கள் மிகவும் கெடுவதற்காக இழிகின்றநீராம். ஆதலாலிது கொடிய நீர் எனவே சுகுணத்தைத் தருவதல்லவென்பது கருத்து-சொக்க மென்பது - சொக்கு எனத்திரிந்தது. (௨௨)

பச்சை நிறநீர் விகற்பம் ஐந்து முற்றியது.

கருமை நிறநீர் விகற்பம்.

கருமைநீர்விகற்பங் கழறப்புகுவா ம்.

இ-ள், கருமைநீர்-கருமை நிறமுள்ளநீரினது - விக ற்பம் - விகற்பங்களை - கழறப்புகுவாம் - சொல்லலுற் றும்-எ-று.——பொ-ள், கருமைநீர் விகற்பத்தைச் சொல்லலுற்றும். (௨௩)

காமாலே நோயைத்தரும் நீர்.

வான்மீகவெழிற்குண்மைக்குணமுறின து
தான்காமாலேநோய்தருமஃதின்றெனி ற்
பித்தநோயேனும்பிறக்கப்பணிக்கு மே.

இ-ள், வான்மீக எழிற்குள்-குங்குமப்பூ நிறத்தினு ள்-மைக்குணமுறில்-கருமைநிறங்கலந்திருக்குமானல்-அது-அந்தநீர்-காமாலே நோயைத்தரும்-அது காமாலே நோயையுண்டுபண்ணும் - அஃதின்றெனில் - காமாலே நோயில்லாவிட்டால்-பித்தநோயேனும்- பித்தநோயாவது-பிறக்க-உண்டாகும்படி-பணிக்கும்-செய்யும்-எ-று-

பொ-ரை, குங்குமப்பூ நிறத்துள் கருமை நிறந்தோன்றுமானல் - அந்தநீர்- காமாலேநோயை யுண்டாக்கும்- இல்லாவிட்டால் - பித்தநோயையுண்டாகச்செய்யும். ()

உதிரக்கெடுதி நீர்.

அம்மையுஞ்சிறியசெம்மையுஞ்சிவணி ணே
அரத்தத்தழிவென்றறைதருநீ ரே.

இ-ள், அம்மையும் - குங்குமப்பூ நிறத்தினுள் அந்தக்கருமை நிறமும்-சிறியசெம்மையும்சிவணிணே-கொஞ்சஞ் சிவப்பு நிறமுங் கலந்திருக்குமானலோ-அரத்தத்தழிவென்று - உதிரத்தினுடைய கெடுதியென்று-அறைதரும் நீர்-சொல்லப்படுகிற நீராம்-எ-று.—

பொ-ரை, குங்குமப்பூ நிறத்துக்குள் கருமை நிறமுங்

கொஞ்சஞ் சிவப்பு நிறமுங்கலந்திருக்குமாகில் உதிரக் கெடுதியாலுண்டாகிய நீராம். (உ-ரு)

உதிரத்தழுக்கைக்காட்டும் நீர்.

காரக்குட்புன்னரிக்கருவிரவியதெனி ன்
ஆர்க்கத்தழுக்கையறிவித்தநீ ரே.

இ-ள், கார்க்குள்-கருமைநிறத்துக்குள் - புன்னரிக் கரு - கொஞ்சம் பச்சைநிறம் - விரவிய தெனின்- கலந்திருக்குமாகில் - ஆர்க்கத்து- உதிரத்திலிருக்கும்- அழுக்கை - அழுக்கினை - அறிவித்தநீர் - தெரிவித்த நீராம்-எ-று.——பொ-ரை, கருமைநிறத்துக்குள் கொஞ்சம் பச்சை நிறங் கலந்திருக்குமாகில் உதிரத்திலிருக்கிற அழுக்கினைத்தெரிவித்த நீராம். புன்மை - என்பது-புன்-என விகாரமாயிற்று. (உசு)

வாதசிலேஷ்மக்கெடுதி நீர்.

மையும்வெளிறுமருவியச்சாயை யே
ஐயுயிர்மிகக்கொதித்தழிவுறுநீரி து
காலாதீதக்கனற்பவத்துடைய து
மாலாந்தருணசுரத்தர்விருத்தர் க்
குண்டாமைத்திரவியத்தூணுற்கொடி தே.

இ-ள், மையும்வெளிறும் - கருமைநிறமும் வெண்மைநிறமும் - மருவிய - கலந்த - சாயையேல் - நிறமுள்ளதாயிருக்குமாகில் - ஐ-சிலேஷ்மமும் - உயிர்- வாத

மும் - மிகக்கொதித்து - அதிகமாகக்கொதித்து - அழிவுறுநீர் - கெடுதலைப்பொருந்திய நீராம். இது - இந்நீரானது - காலாதீதம்-நெடுங்காலத்துக்குமுன்-கனல்-உஷ்டினத்தின் - பவத்து - உற்பத்தியினால் - உடையது-உண்டாயிருப்பது - மாலாம் - மயக்கத்தையுண்டாக்குகிற - தருணசுரத்தர்-தருணசுரரோகிகட்கும்- விருத்தர்க்கு-கிழவர்களுக்கும் - உண்டாம் - உண்டாகும்-ஐத்திரவியத்தூணால் - சிலேஷ்ம வஸ்துவாகப் புசிக்கிற ஆகாரத்தினால் உண்டாவது- கொடிது - அதுகொடியதாகும்-எ-று.——பொ-ள், கருமைநிறமும் வெண்மைநிறமுங்கலந்த நிறமுள்ளதா யிருக்குமாகில், சிலேஷ்மமும் - வாதமும் - அதிகமாகக் கொதித்து கெடுதலைப்பொருந்திய நீராம். இந்நீரானது நெடுங்காலத்துக்குமுன்உஷ்டினத்தின் உற்பத்தியினால் உண்டாயிருப்பது. இது மயக்கத்தை உண்டாக்குகிறதாகிய தருணசுரத்தினருக்கும் கிழவர்களுக்கும் உண்டாகுவது. இது உண்டாவதற்குக் காரணம் சிலேஷ்ம வஸ்துவை அதிகமாகவுண்கிற ஆகாரத்தினலென்றுணர்க. சிலேஷ்ம வஸ்துவினா லுண்டாவதாதலால், இந்நீர் கொடியதாம்.

கருமைநீர் விகற்பம் நான்கும்முற்றியது. (27)

வெண்மை நீர் விகற்பம்.

வெண்மைநீர்விகற்பம்விரித்தினி துரைப்பாம்.

இ-ள்; வெண்மை-வெண்மை நிறமுள்ள - நீர்-நீரினுடைய-விகற்பம்-பேதங்களை-விரித்து-விரிவாக-இனிது-இன்பமுடன் - உரைப்பாம் - சொல்லுகிறோம்-எ-று.

பொ-ரை, வெண்மைநிறமுள்ள நீரினுடைய பேதங்களை விரித்துச்சொல்லுகிறோம். (உஎ)

சுத்தசீதள நீர்.

வெண்மையுமுற்றுமிகத்தெளிவுடைத் தே
லுண்மையாஞ்சுத்தசீதளத்துதக மா
மிந்நீர்வசப்படாதிவனுய்யுந்த ர
முந்நீர்ப்பெருக்கமிழ்வானுய்தலொக்குமே.

இ-ள், வெண்மையுமுற்று - வெள்ளைநிறமும் பொருந்தி - மிகத்தெளிவு-மிகுந்ததெளிவும் - உடைத்தேல்-உடையதாயிருக்குமாகில் - உண்மையாம்-உண்மையாகிய - சுத்தசீதளத்து-சுத்தசீதளத்தினலுண்டாகிய-உதகமாம் நீராம். இந்நீர்-இந்தநீரானது-வசப்படாது-ஔஷதங்களால் சாத்தியப்படாது. இவன் இந்தரோகஸ்தன்-உய்யுந்தரம்-பிழைக்குந்தன்மை(எவ்வாறெனில்) முந்நீர்ப்பெருக்கு-சமுத்திரப்பெருக்கில்- அமிழ்வான்-அழுந்துகின்றவன்-உய்தலொக்கும்-பிழைக்குந்தன்மையையொப்பாகும்-எ-று. — — பொ-ரை, வெள்ளைநிறமும் பொருந்திமிகுந்ததெளிவும் உடையதாயிருக்குமானல் உண்மையாகிய சுத்தசீதளத்தினல் உண்டாகியநீராம்.

இந்நீரானது, ஔஷதங்களினுல்வசப்படாது. ஆகையா ல்இந்தரோகஸ்தன்பிழைக்குந்தன்மை எவ்வாறெனில், சமுத்திரப்பெருக்கில் அழுந்துகின்றவன் பிழைப்பதை யொப்பாகும். சமுத்திரப்பெருக்கு-என்றது பிரசண்ட மாருதத்தினுலே கரைகடந்துபெருகுவது எனக்கண்டு கொள்க. இந்த உவமையின் கருத்து சீதளப்பிரபலத் தையும் அசாத்தியக்குறியையும் விளக்கியது. (உ அ)

சிலேஷ்மத்தின் கொதிப்பாலிறங்கும் நீர்.

அறவெளிர்ப்பிலுஞ்சளியைப்போல்விழின் து
மறவனதிகொதிப்பால்வருவன மே.

இ-ள், அறவெளிர்ப்பிலும்-மிகுதியாகவெளுத்திருப்ப துமல்லாமல் - சளியைப்போல்விழின் - சளியைப்போ லிறங்குமானுல்-அது-அந்நீரானது - மறவன்-சிலேஷ்ம த்தின் - அதிகொதிப்பால்-மிகுந்தகொதிப்பினுல்- வரு வனமே-வருகின்றநீராம்-எ-று.—பொ-ள், மிகுதியாக வெளுத்திருப்பது மல்லாமல் சளியைப்போல விழுமா னுல் அந்த நீர் சிலேஷ்மத்தின் மிகுந்த கொதிப்பினுல் வருகின்றநீராம். (உகூ)

க்ஷய நீர்.

அமிழ்தரியெனினொன்பறவுருக்கிய நீ
ரஃதேகயநோயாக்குமந்தத் தே.

இ-ள், அமிழ்து-பாலைப்போல-அரியெனில்-நிறமுள் ளதாயிருக்குமானுல் - என்பு-எலும்பை - அற-மிகுதி

யாக - உருக்கியநீர்-உருக்கியநீராம். அஃதே -அந்நீரே- அந்தத்து-முடிவில்-கயநோயாக்கும்- க்ஷயரோகத்தை யுண்டாக்கும்-எ-று.—பொ-ளை, பால்போன்றநிறமுள் ளதாயிருக்குமானல் எலும்பை மிகுதியாக் உருக்கிய நீராம். அந்நீரேமுடிவில் க்ஷயரோகத்தையுண்டாக்கும்.

கருப்பத்தில் விரணமுண்டாகும் நீர்.

காணிதிற்சிழுங்கலந்திழிமணமுறி ற்
கருப்பநாபிகளுளுங்காமநாளத்துளு ம்
விரணமுண்டின்றேலெய்துமஸ்மரிய ல
திருத்தலேதிண்ணமெனமனத்தெண் ணே.

இ-ள், காணிதில் காணுகிறஇந்நீரில் - சீழுங்கலந்து- சீழும்விரவி - இழிமணம் - துர்வாசனையும் - உறின்- பொருந்தி யிருக்குமானல் - கருப்ப நாபிகளுள்ளும்- கருப்பாசயத்தினுள்ளும் நாபிஸ்தானத்தினுள்ளும்- காமநாளத்துளும் - ஆண்குறித் துவாரத்தினுள்ளும்- விரணமுண்டு-புண்ணிருக்கும்-இன்றேல்-புண்ணில்லா விட்டால்- எய்துமஸ்மரி-அஸ்மரிரோகம்இனி யுண்டா குமென்றும். அல்த்- அல்லது - இருத்தலே திண்ண மென-அவ்வஸ்மரி ரோகமிருப்பதேநிச்சயமென்றும்- மனத்து-மனதில்-எண் - எண்ணக் கட்வை.

பொ-ளை, காணுகின்ற இந்நீரில்சீழுங்கலந்து துர்வா சனையும் பொருந்தியிருக்குமாகில், கருப்பத்தினுள்ளும்

நாபியி னுள்ளும் - ஆண்குறித் துவாரத்தினுள்ளும் - புண்ணுண்டாயிருக்கும். புண்ணில்லாவிட்டால், * அஸ்மரிரோகம் இனி யுண்டாகு மென்றும், அல்லது அவ்வஸ்மரிரோக மிருப்பதே நிச்சய மென்றும், மனதில் எண்ணக்கடவை.—* அஸ்மரி என்பது-கல்லடைப்பு ரோகமாம். (௩க)

கபத்தையுஞ் சந்நிபாதத்தையுந் தருநீர்.

விந்துவைப்போன்றநீர்விறற்கபநோயையு ம்
பந்தித்தசந்நிபாதத்தையுந்தரு ம்.

இ-ள், விந்துவைப்போன்ற நீர் - இந்திரியத்தை யொத்தநீரானது - விறல் - பலமுள்ள-கபநோயையும்-மூன்றுவித கபநோயையும் - பந்தித்த-உறுதிப்பட்ட-சந்நிபாதத்தையுந்தரும்-சந்நிபாத தோஷத்தையு முண்டாக்கும்-எ-று.——பொ-ள், இந்திரியத்தை யொத்த நீரானது, * மூன்றுவித கபநோயையும் சந்நிபாத தோஷத்தையுந்தரும். * மூன்றுவித கபமாவது-காசம்-சுவாசம்-க்ஷயம்-என்பவைகளாம். (௩உ)

உப்புறையாதநீர்

விடுமூழியுவருருவிடினதுகொடி தே.

இ-ள், விடுமூழி-நீரினை விட்ட இடத்தில் - உவருருவிடின்- உப்புறையாவிட்டால் -அது கொடிது - அந்தநீர்கொடியதாம்-எ-று.——பொ-ள், நீர்விடுமிடத்தில் உப்புறையாவிட்டால், - அந்நீர் கொடியதாம். (௩௩)

வெப்பநீர்.

தக்கிரம்பாலெனத்தனித்தனியொழுகு மே
லுக்கிரவெப்பத்துதிகாலநீ ரே.

இ-ள், தக்கிரம்-மோர்போலவும் - பாலென - பால் போலவும் - தனித்தனி யொழுகுமேல் - தனித்தனி யிறங்குமானல் - உக்கிரவெப்பத்து - உக்கிரமான வெப்பத்தினல் - உதி - உதிக்கா நின்ற - காலநீராம்-யமனையொத்த நீராம்-எ-று.——பொ-ரை, மோரைப் போலவும் பாலைப்போலவுந் தனித்தனி யொழுகு மானல், உக்கிரமான வெப்பத்தினல்உண்டாகின்ற யம னையொத்தநீராம். (கூசு)

குண்டிக்காய்த்துர்ப்பலநீர்.

தீப்புலால்கழுநீர்ச்செயலெனிற்குண்டி க்
காய்த்துர்ப்பலத்தாற்கதித்தநீராம த்
துர்ப்பலங்கபமுஞ்சோரியுங்கொதிப்புற ப்
பற்பகலாகப்பையப்பதிந்த தே.

இ-ள், தீப்புலால்-கொடியபுலால்மாமிசத்தை - கழு நீர்ச்செயலெனில்-கழுவிய நீர் நிறமுண்டாயிருக்குமா கில்-குண்டிக்காய் - குண்டிக்காயின து-துர்ப்பலத்தால்-பல ஈனத்தால் - கதித்தநீராம் - உண்டானநீராம். அத் துர்ப்பலம்-அந்தப்பல ஈனம்-(எவ்வாறுண்டாய தென் றல்)கபமும்- சிலேஷ்மமும் - சோரியும் - உதிரமும்-

கொதிப்புற-கொதிப்பு அடைந்ததினல் - பற்பகலாக- அநேகநாளாக-பைய -கொஞ்சங் கொஞ்சமாய்-பதிந்த து-உண்டாயது-எ-று.—பொ-ள, கொடியமாமிசத்தை க்கழுவினநீர் நிறமுண்டாயிருக்குமாஞல், குண்டிக்கா யினது துர்ப்பலத்தால் உண்டான நீராம். அந்தத்துர்ப் பலம் எவ்வாறுண்டாயதென்ருல், சிலேஷ்மமும் உதிர மும் கொதிப்படைந்ததினல் பலநாளாகக் கொஞ்சங் கொஞ்சமாயுண்டாகியது. (ருரு)

அசாத்திய நீர்.

தடிக்கினுநெய்யின்றன்மையொத்திடினு ம்
படிக்குளிரண்டுபாணியுந்தீ தே.

இ-ள், தடிக்கினும்-தடிப்பாயிருந்தாலும்-நெய்யின்ற ன்மை-நெய்யினதுதன்மையை -ஒத்திடினும்-ஒத்திருந் தாலும்-படிக்குள் -இவ்வுலகத்தினிடத்தில்-இரண்டுபா ணியும்-இவ்விருவகைநீரும்-தீதே-கொடியதே-எ-று.— பொ-ள, தடிப்பாயிருந்தாலும் - நெய்யின்றன்மை யொத்திருந்தாலும்-கொடியதானநீராம். (ருசு)

வெண்மை நீரிலக்கண முற்றியது.

இனிநீரின்நிறையிலக்கணம்சொல்லப்படும்-நிறை-இடை.

நபத்தை இளக்குகிற நீர்.

அற்பமுங்கனமற்றதிதெளிவுறுமெனி ன்
வற்புறுசீதளமன்னிக்கனத்து க்
கபத்தையிளக்கலாற்கண்டநீரிஃ தே.

இ-ள், அற்பமும் - கொஞ்சமும் - கனமற்று-பளு வில்லாமல் - அதிதெளிவு - மிகுந்ததெளிவை - உறு மெனில்-பொருந்துமானல்-இது-இந்நீரானது-வற்புறு-வலுமைபொருந்திய - சீதளமன்னி - சீதளமுண்டாகி-கனத்து - அதிகரித்து-கபத்தை யிளக்கலால் - சிலேஷ்மத்தை யிளக்குவதினுல்-கண்டநீர்-உண்டாகிய நீராம்-எ-று.——பொ-ரை, கொஞ்சமுங் கனமென்பதில்லாமல் மிகுந்த தெளிவைப்பொருந்துமானல், இந்த நீரானது சீதளமுண்டாகி அதிகரித்துச் சிலேஷ்மத்தை யிளக்குவதினு லுண்டாகிய நீராம். (௩எ)

மூத்திரப் பை விந்துஸ்தான துர்ப்பல நீர்.

இதுநீர்ப்பையிந்திரியவுழியிவற்று ண்
முதிர்துர்ப்பலத்தான்மூளைத்தெனக்கொள்க.

இ-ள், இது-இந்நீரானது-நீர்ப்பை-மூத்திரப்பையின்-முதிர் துர்ப்பலத்தால் - மிகுந்த பலவீனத்தினுலும்-இந்திரியவுழி - விந்துஸ்தானத்தின் - முதிர்துர்ப்பலத்தால்-மிகுந்த பலவீனத்தாலும்-இவற்றுண் - இவ்விடங்களுள் சி -ளைத்தெனக்கொள்க - உண்டானதென்று அறிந்து கொள்க-எ-று.—பொ-ரை, இந்நீரானது மூத்திரப்பையின் துர்ப்பலத்தினுலும் - இந்திரியஸ்தானத்தின் மிகுந்த துர்ப்பலத்தினுலும் - உண்டாகியதாம்.

மிக்குத்தடித்துவிழுமேன்மலங்க ளி
னற்குணவழுவைநன்கோதுநீ ரோ
(இதனுல்) வீக்கமும்பிடகமுமேவிடுமிவைம று
நாட்குநாளல்கினலனுமிவரி ற்
ளுெடிற்சுடுங்கொடியவிடச்சுரமண்ணு மே.

இ-ள், (அன்றியும்) மிக்குத்தடித்து - மிகுந்தகனமு ள்ளதாய் - விழுமேல்-விழுமானுல்-மலங்களின் - வாத பித்த சிலேஷ்மங்களினுடைய-நற்குணவழுவை - சுகு ணக்கெடுதியை - நன்கு-நன்ருக-ஓதுநீர் - சொல்லுகி ன்றநீராம். இதனுல்-இந்நீரினுல் - வீக்கமும் - சோபை யும் - பிடகமும்-கட்டிகளும்-மேவிடும் - அதிகரிக்கும். இவை - இவ்விரண்டும் - மறுநாட்குநாள் - கண்டமறு நாளுக்குநாளாக - அல்கின்- குறைந்தால்-நலனும்-நன் மையாம். இவரின்-அதிகரிக்குமாயின்-தொடில் - தொ ட்டால் - சுடும்-சுடுவதான - கொடிய-கொடுமையுள்ள விடச்சுரம் - விஷச்சுரரோகமானது-அண்ணும் - பொ ருந்தும்-எ-று.——பொ-ளை, மிகுந்த கனமுள்ளதாய் விழுமானுல்வாதபித்த சிலேஷ்மங்களின் சுகுணத்தில் நின்றும்உண்டாகிறகெடுதியைநன்ருகச்சொல்லுகின்ற நீராம். இந்த நீரினுல், வீக்கமும் கட்டிகளும் அதிகரிக் கும். இவ்வாறு அதிகரித்தவை நாளுக்குநாள் குறையு

மானல் நன்மையாம். அதிகரிக்குமானல் தொட்டவளவில்சுடுவதானகொடியவிஷச்சுரம் பொருந்தும். (நகூ)

சுபாவ நீர்.

மிகத்தடிப்பும்மிகத்தேறலுமின்றெனி ற்
சுகத்தைத்தருமெய்ச்சுபாவநீர்நன் றே.

இ-ள், மிகத்தடிப்பும்-மிகுந்ததடிப்பும்-மிகத்தேறலும்-மிகுந்ததெளிவும்-இன்றெனில்- இல்லாவிட்டால்-சுகத்தைத்தரும் – சுகத்தைத்தருவதான – மெய்ச்சுபாவநீர்-சரீரசுபாவநீராம். நன்று-இதுநன்மையானது-எ-று.—

பொ-ள், மிகுந்த தடிப்பும் அதிதெளிவுமில்லாவிட்டால், சுகத்தைத் தருவதான சரீரசுபாவநீராம். இது நன்மையானதே. (சo)

நிறையிலக்கண - முற்றியது.

இனி-மணவிலக்கணங் கூறுகின்றது.

சீதளதேகிகளுக்குண்டாகும் நீர்.

ஓதமணத்தொடவ்வோதமொத்திறங்கு ஞ்
சீதளங்கம்மியதேகிகளுக் கே.

இ-ள், சீதளங்கம்மிய- சீதளமூடிய – தேகிகளுக்கு-சரீரமுள்ளவர்களுக்கு –ஓதமணத்தொடு – வெள்ளத்திலுண்டானவாசனையுடன் – அவ்வோதமொத்து – அந்தவெள்ளத்தினது நிறத்தையும் ஒத்து –இறங்கும்-மூத்திரம் இறங்கும்-எ-று.— —பொ-ள், சீதளங்கம்மியதே

கிகளுக்கு வெள்ளத்துள்ள வாசனையுடன் இருக்கின்ற வெள்ளத்தின் நிறத்தையுமொத்தும் மூத்திரம் இறங்கும். ()

மூத்திரப்பை நாளப்புண்ணீர்.

வெய்ய துர்க்கந்தம்வீசுநீர்மூத்திரப்
பைநாளமிவற்றைப் பற்றுபுண்குறியே
அம்மொழியின்றெனினனிலமேமுதலி
மும்மலச்சுதமேமூலமென்றுணரே.

இ-ள், வெய்யதுர்க்கந்தம் - கொடிதான துர்க்கந்தத்தை-வீசுநீர் - வீசுகின்றநீரானது - மூத்திரப்பை-மூத்திரப்பை-நாளம் - அதன் துவாரம்-இவற்றை - இவைகளை-பற்றுபுண்குறியே-பற்றியிருக்கும் விரணங்களின் குறியாம். அம்மொழியின்றெனின் - விரணமுண்டென்கிற சொல்லில்லாவிட்டால் - அநிலமே முதலிய-வாத முதலாகிய-மும்மலச்சுதமே - வாதபித்தசிலேஷ்மங்களின்கெடுதியே - மூலமென்றுணர் - அதற்குக்காரணமென்று அறியக்கடவை-எ-று.——பொ-ரை, கொடிதானதுர்க்கந்தத்தை வீசுகின்ற நீரானதுமூத்திரப்பையினையும்-அதன் துவாரத்தினையும் - புண்பற்றியிருக்குமென்கிற குறியைக்காட்டுகின்ற நீராம். புண்ணுண்டென்கிறசொல்லில்லாவிட்டால் வாதபித்த சிலேஷ்மங்களின் கெடுதியே அதற்குக் காரணமென்று அறியக்கடவை.

(சஉ)

உஷ்ணரோக நீர்.

மட்டிற்புளிமணமணந்திழிந்திடின ஃ
துட்டினப்பிணிபிணிப்புற்றெழுநீ ரோ
முடிவிலவ்வுட்டினமுளரிவாயறல்போ ற்
படுசீதளச்சம்பந்தமாக்கிடு மே.

இ-ள், மட்டில் - அளவில்லாத-புளிமணம்-புளியின் வாசனை-மணந்து - கமழ்ந்து- இழிந்திடின்-இறங்குமா யின்-அஃது - அந்நீரானது-உட்டினப்பிணி - உஷ்ண ரோகமானது- பிணிப்புற்று-பந்தப்பட்டு-எழுநீர்-உண் டாகின்ற நீராம். முடிவில்-கடைசியில் (பிணியாளனை) அவ்வுட்டினம் - அந்த உஷ்ணரோகமானது - மூளரி வாய் - அக்கினியினிடத்திலுண்டாகும் -அறல்போல்- நீர்போல்-படு- உண்டாகும்-சீதளச் சம்பந்தமாக்கிடும் சீதளத்துடன் சம்பந்தமாக்கிவிடும் -எ-று.

பொ-ரை, அளவில்லாத புளியின்வாசனைகமழ்ந்து இறங்குமானால்அந்நீரானதுஉஷ்ணரோகம்பந்தப்பட்டு உண்டாகின்றநீராம். கடைசியில் அந்தஉஷ்ணரோகமா னது, பிணியாளனை அக்கினியிலுண்டாகும் நீர்போலச் சீதளத்துடன் சம்பந்தமாக்கிவிடும். (சரு)

உதிரமிகுதியாலுண்டாகும் நீர்.

இனித்தமணத்தோடிறங்கினெய்மிகு ச்
சனித்தவிருத்திரையத்தழுவியநீ ரோ

அல்லதவ்விருத்தியாலாம்பிணிக்குழாத் த
தல்லதில்லென்பதாய்ந்தோர்மத மே.

இ-ள், இனித்த- இனிப்பாகிய- மணத்தோடு- வாசனையுடன்- இறங்கின்- இழியுமானல்-நெய்மிக்கு-உதிரமிகுந்து - சனித்த-உண்டாகிய- விருத்தியை - விர்த்தியை-தழுவியநீர்-பொருந்தியநீராம். அல்லது - அதல்லாவிட்டால் - அவ்விருத்தியால் - அந்தஉதிர விர்த்தியால் - ஆம்பிணிக்குழாத்ததல்லது-உண்டாகும் வியாதிக்கூட்டத்தை யுடையதேயன்றி - இல்லென்பது- வேறேயில்லையென்பது - ஆய்ந்தோர்மதமே- வைத்திய சாஸ்திரம் ஆராய்ச்சிசெய்த முன்னோர்கள் கோட்பாடு-எ-று.—பொ-ா, இனிப்பாகிய வாசனையுடன் இறங்குமானல், உதிரமிகுந்துண்டாகிய விருத்தியைப் பொருந்திய நீராம். அஃதல்லாவிட்டால் அந்தவியாதிக்கூட்டத்தை யுடைய்தேயன்றி வேறேயில்லை யென்பது வைத்திய சாஸ்திரம் ஆராய்ச்சிசெய்த முன்னோர்கள் கோட்பாடு. (சச)

பித்தசுபாவகுணக்கெடுதி நீர்.

கருமான்மணமேகமழுமென்றுல து.
குரவன்சுபாவகுணங்கெடுநீ ரே.

இ-ள், கருமான் - கருமைநிறமுள்ளமானினுடைய உட்டிலுள்ள - மணமே-வாசனையே- கமழுமென்றுல்-

நாறுமானால் - அது - அந்நீரானது - குரவன் - பித்தத்தினுடைய - சுபாவகுணம் - சுபாவகுணமானது - கெடுநீர் - கெடுதியடைந்தநீராம் - எ-று.—பொ-ரை, கருமைநிறமுள்ளமானினுடையநாற்றமே நாறுமானால், பித்தத்தினுடைய சுபாவகுணவிகற்பநீராம். (௬௫)

சரீரப்பசைக்கெடுதி நீர்

புலான்மணங்கமழிற்பூதியப்பசைக் கே
டலாதில்லையந்நீரக்குணமின்றெ னி
லடையுந்ததியென்றறையத்தான்மிக க்
கெடுதியெனவுங்கிளக்குஞ்சுருதி பே

இ-ள். புலான்மணம் - புலால்நாற்றம் - கமழில் - நாறுமானால் - பூதியம் - சரீரத்தினுடைய - பசைக்கேடலாதில்லை - பசைக்கெடுதியேயல்லது வேறொன்றுமில்லை - அந்நீர்க்கு - அந்தநீருக்கு - அக்குணமின்றெனில் - அக்குணமில்லாவிட்டால் - அடையுந்ததியென - அடையுங்காலமென்று - அறை - சொல்லுவாயாக - அத்தால் - அதனால் - மிகக் கெடுதியெனவும் - மிகுந்தகெடுதியுண்டாமென்றும் - சுருதி - ஆயுள்வேதமானது - கிளக்கும் - சொல்லுகின்றது - எ-று.—பொ-ரை, புலால்மணம் போல நாற்றம் நாறுமானால், சரீரத்தின் * பசைக்கேடேயல்லது வேறொன்றுமில்லை, அல்லது அந்த நீருக்கு அந்த குணம் அப்போதில்லாவிட்டாலும், உடனே

வருங்காலமென் று சொல்லுவாயாக. அந்நீரினால்மிகுந் தகெடுதிவருமென்றும்,ஆயுள்வேதஞ்சொல்லுகின்றது. *பசையர்வது-மச்சை-மேதை-முதலிய தாதுக்கள் கரைந்துவெளிப்படுவதினு லுண்டாகும் நீராம். (சகூ)

மணவிலக்கண முற்றியது.

இனி நுரையிலக்கணம்.

மூத்திரத்தில்வாயுகலக்கும் நீர்.

பந்தமெய்ப்பசையிளகப்படும்பருவத்
தந்தர்ப்பூதமாயனிலமூத்திரத்திற்
சம்பந்தப்படுந்ததிநுரைப்புனலே.

இ-ள், பந்தம் - பந்தமாகிய - மெய்ப்பசை - சரீரப்பசை - இளகப்படும்பருவத்து - இளகப்படுங்காலத்தில் - அந்தர்ப்பூதமாய்-ஒருவருக்குந் தெரியாதவண்ணம் - மூத்திரத்தில்-மூத்திரத்தில் - அநிலம் - வாயுவானது - சம்பந்தப்படும் - சம்பந்தப்படுகின்றது-ததி அக்காலத்தில்- நுரைப்புனல்-நுரைபொருந்தியநீருண்டாகும்-எ-று.—பொ-ரை,பந்தமாகியசரீரப் * பசையானது இளகப்படுங்காலத்தில் ஒருவருக்குந்தெரியாவண்ணம் மூத்திரத்தில் வாயுவானது சம்பந்தப்படும்* அப்போது நுரைபொருந்திய நீருண்டாம். ஈண்டு கூறிய பசையாவது-அவலம்பகம்-தருப்பகம்-கிலேதகம் - சந்திகம் -,போதகம் - என்று சரீர உறுதிக்காக இருக்கும்பசையாம். (சஎ)

காமாலை நீர்.

அந்நுனைபீதங்கருமைசெம்மைகளி ன்
மன்னுறுநிறந்தரின்வருங்காமாலையெ ன்
றுன்னிப்புரப்பரொப்பிற்பிடக ரோ.

இ-ள், அந்நுனை-அந்தநுனையானது - பீதம் - மஞ்சள் - கருமை-கறுப்பு - செம்மை-சிவப்பு - என்னும் இவைகளைப்போல-மன்னுறு-பொருந்திய நிறந்தரின்-நிறங்களைக்காட்டுமானால்-வருங்காமாலையென்று-காமாலைரோகம்வருமென்று-உன்னி-கருதி - ஒப்பில்-நிகரில்லாத-பிடகர்-பிடகநூலுணர்ந்தவைத்தியர்கள்-புரப்பர்-அவ்வாறு வரவொட்டாமல் பாது காப்பர்கள்-எ-று.

பொ-ரை, அந்தநுனையானது- மஞ்சள்-கறுப்பு-சிவப்பு - என்னும் இவைகளைப்போலப்பொருந்திய நிறங்களைக் காட்டுமானால், காமாலைரோகம் வருமென்று கருதி நிகரில்லாத பிடகநூலுணர்ந்த வைத்தியர்கள் அவ்வாறு வரவொட்டாமல் பாதுகாப்பார்கள். (௬௮)

வாதமுதலிய மூன்றுங்குறையும் நீர்.

நுனைதேய்ந்தொழுகுநீர்நுவலருமும்மல ங்
களையவிளகிடுங்காலத்தென் னே.

இ-ள், நுனைதேய்ந்து- நுனையானதுகுறைந்து-ஒழுகுநீர்-இறங்காநின்ற நீரானது - நுவலரும் - சொல்லுதற்கரிய - மும்மலம் - வாத பித்த சிலேஷ்மங்கள்-

கஹாய-குறைவதினல்-இளகிடுங்காலத்து-தன் வலுமை குறையுங்காலத்தி லுண்டாவது - என்னே-என்றுசொ ல்லுவாயாக-எ-று.——பொ-ள், நுஹாயானதுகுறைந் து ஒழுகாநின்ற நீரானது, வாத பித்த சிலேஷ்மங்கள் குறைவதினல் தனது வன்மைகுறையுங்காலத்தி லுண் டாவதென்று சொல்லுவாயாக. (சகூ)

நுஹாயிலக்கண முற்றியது-இனிசுருங்கலிலக்கணம்.

பாண்டுரோக நீர்.

இயற்கைநீர்சுருங்கினுமிதுவுஞ்சலப்பொருள்
செயற்கையாயருந்தினுஞ்சிறுத்தநீரிதுவும்
பாண்டுநோய்ச்சம்பவத்தைத்தருமிதிற்
றாண்டுருப்பேதியுஞ்சோர்வும்பிறக்குமே.

இ-ள், இயற்கை-சுபாவமான - நீர்-நீரானது-சுருங் கினும் - குறைந்தாலும் - இதுவும்-இந்தநீரும் - சலப் பொருள் - சலவஸ்துக்களை - செயற்கையாய் - மிகுதி யாகச் சேர்த்துக்கொண்டு-அருந்தினும் - புசிக்கினும்- சிறுத்த நீரிதுவும் சுருங்கியநீர், இதுவும்-பாண்டுநோய்- பாண்டுரோகத்தினுடைய-சம்பவத்தைத்தரும் - உற்ப த்தியைக் கொடுக்கும் - இதில் - இதனுடன் - தாண்டு ருப்பேதியும் - நீக்கக்கூடாதபேதியும் - சோர்வும்-அய

பாண்டுரோகத்தினுடைய அயர்வும் - பிறக்கும் - உண்டாகும்-எ-று.——பொ-ள், ஓரேதுவுமில்லாமல், சுபாவமாகக் குறைப்படுநீரும், சலவஸ்துக்கள் மிகுதியாகப்புசித்தாலும் சுருங்கிய நீரும், பாண்டுரோகத்தினுடைய உற்பத்தியைத்தரும். இதனுடன் பேதியுஞ் சோர்வும் உண்டாகும். (௫0)

இனி நிறக்குறி மதாந்தரம் வருமாறுகாண்க.

வாதப்பிணி நீர்நிறக்குறி.

மதாந்தரம்.

பாண்டரிநெய்யரிபற்றியநீரொலா ந்
தாண்டரிநோயேதருமெனுஞ்சிலநூ ல்.

இ-ள், பாண்டரி - வெள்ளைநிறத்தையும் - நெய்யரி - உதிர நிறத்தையும்-பற்றிய - பொருந்திய - நீரொலாம்- நீர்களெல்லாம் - தாண்டரிநோயே - தாவுகின்ற வாதரோகத்தையே-தருமெனும்-கொடுக்குமென்று சொல்லும் - சிலநூல் - சிலசாஸ்திரங்கள்-எ-று.

பொ-ள்,——வெள்ளை நிறத்தையும் உதிரநிறத்தையும் பொருந்திய நீரெல்லாம் வாதரோகத்தைத் தரும் என்று சிலநூல் சொல்லும். (௫௧)

பித்தப்பிணி நீர்நிறக்குறி.

கனிபொம்மன்மாசுக்கனிநிறம்போன்று ங
கனத்தசவ்வீரக்களையதுபோன்று ஞ்
சனித்தவெண்ணெய்யின்றன்மையைப்போன்று ஞ்
சாரியநீரிவைசீரியமெய்க்குளா ம்
பித்தப்பிணியாற்பிறந்தனவென் றே
சித்தசாரனவந்தெளியவிரிக்கு மே

இ-ள், கனிபொம்மன்மாசுக்கனி-கனிந்தபொம்மன் மாசுப்பழத்தின் - நிறம்போன்றும் - நிறத்தையொத் தும் - கனத்த - கனத்ததாகிய- சவ்வீரம்- சவ்வீரத்தி னுடைய - களையதுபோன்றும் - ஒளியையொத்தும்- சனித்த-உண்டாகிய - எண்ணெய்யின் - எண்ணெய்யி னுடைய-தன்மையைப்போன்றும்- வன்னத்தையொத் தும்- சாரியநீரிவை-ஒழுகாநின்றநீரானவைகள் சீரிய- சிறப்புள்ள மெய்க்குளாம்-சரீரத்துக்குள்ளுண்டாகிய- பித்தப்பிணியால் - பித்தரோகத்தால் - பிறந்தனவென் றே-உதித்தனவைகளென்றே - சித்தசாரனவம்-சித்தசார னவமென்னுஞ்சாத்திரமானது-தெளியவிரிக்கும்-;தெ ளிவுபடவிரித்துச்சொல்லும்-எ-று—பொ-ள, பொம் மன்மாசுப்பழத்தினுடையநிறத்தையொத்தும், சவ்வீர த்தினுடைய ஒளியையொத்தும், எண்ணெய் வன்னத்

தையொத்தும், இறங்காநின்ற நீர்களானவை சரீரத்தி லுண்டாகிய பித்தரோகத்தால்உண்டாயவைகளென்று சித்தசாரனவமென்னுஞ் சாஸ்திரம் சொல்லுகின்றது.

பித்தம்-காமாலை-இவைகளின் நீர்நிறக்குறி.

௫

மந்திரிநிறமாய்வரப்படுநீ ரு
முந்தியவெருவையையொத்துகுநீரு ம்
பித்துகாமாலைகளாற்பிறந்தனவென ச்
சித்தியவித்தியாதரஞ்செப்பு மே.

இ-ள், மந்திரிநிறமாய் - பித்தநிறமுள்ளதாய் - வரப் படுநீரும் - வருகின்ற நீரும் - உந்திய - செலுத் துகிற - எருவையையொத்து - உதிரத்தையொத்து- உகும் நீரும் - ஒழுகும்நீரும் - பித்துகாமாலைகளால்- பித்த காமாலைரோகங்களால் - பிறந்தனவென்று-உண் டானவைகளென்று - சித்தியவித்தியாதரம் - சித்த வித்தாதரமென்னுஞ் சாஸ்திரமானது - செப்பும்- (எந்நாளும்) சொல்லும்-எ-று—பொ-ரை, * பித்தநிற மாய் வருகிறநீரும், உதிரத்தையொத்து வருகிறநீரும், பித்த காமாலைரோகங்களால் உண்டானவைகளென்று சித்தவித்தாதரம் என்னும்சாஸ்திரம்சொல்லுகின்றது.

* பித்த நிறமாவது-மஞ்சள்நிறம். (௫-ம்)

கபப்பிணி நீர்நிறக்குறி.

அருச்சுனத்தொடுநுரைபுற்புதமெழி னு
மருந்துநீரொக்கினுமவியினையொக்கினு ங்
கலப்பெழிலுறினுமக்காண்டங்கபநோ ய்
தலைப்படுங்காலைச்சாருமென்ப ரே.

இ-ள், அருச்சுனத்தொடு - வெண்மை நிறத்துடன்- நுரை-நுரையும் - புற்புதம்-குமிழியும் - எழினும்-உண்டானாலும் - அருந்தும் நீர்-உண்ணும் நீரை-ஒக்கினும்- உவரில்லாமல் ஒத்திருந்தாலும்-அவியினையொக்கினும்- நெய்யினை யொத்தாலும்-கலப்பு எழில் உறினும்-கலந்த நிறங்கள் பொருந்தினாலும் - அக்காண்டம் - அந்தநீரானது - கபநோய்-கபரோகமானது - தலைப்படுங்காலை- உண்டாகிற காலத்தில் - சாருமென்பர்-வருமென்று முன்னோர் சொல்வர்கள்-எ-று.—பொ-ரை, வெண்மை நிறத்துடன் நுரையுங் குமிழியும் உண்டானாலும், உப்பின்றன்மையில்லாமல் குடிக்கின்ற சுத்த சலத்தைப் போலிருந்தாலும், நெய்யையொத்திருந்தாலும், பல்நிறங்கலந்துதோன்றினாலும், அந்நீரானது கபரோகம் உண்டாகுங்காலத்தில் வருமென்று முன்னோர் சொல்வர்.

தொந்தப்பிணி நீர்நிறக்குறி.

இன்னுமம்மதமேஇருந்தொந்தநீழனீ ர்
தன்னிற்கருமைச்சாயையுண்டென்னு மே.

இ-ள், இன்னுமம்மதமே-இன்னமும் அந்த மதாந்திரத்தில்-இருந்தொந்தநீழல் நீர்தன்னில்-பெரியதொந்த நிறத்துடன்உண்டாகும் நீரினிடத்தில்-கருமைச்சாயைபுண்டென்னும்-கருமை நிறமுங் கலந்திருக்குமென்று சொல்லும்-எ-று.——பொ-ள, * தொந்தநிறத்துடன் உண்டாகின்ற நீரினிடத்து கருமைநிறமுமுண்டாகும் என்றுசொல்லும். * தொந்த நீராவது - வெண்மை-சிவப்பு - மஞ்சள் - கருமை - இந் நிறங்கலந்திருக்கும் நீராம். (௫௫)

மேகரோகம்-மகாரோகம்-இவைகளின் நீர்நிறக்குறி.

புண்ணீர்மேகப்புன்கண்மாப்பி ணி
நண்ணினித்தியநாதீயமாமெனு ம்.

இ-ள், புண்ணீர் - உதிரமானது - நண்ணில் - நீரில் காணுமானல் - மேகப்புன்கண்-மேகரோகமும் - மாப்பிணி-மகாரோகங்களும்-ஆமெனும்உண்டாகுமென்று-நித்தியநாதீயம் - நித்தியநாதீய மென்னும் சாஸ்திரமானது சொல்லும்-எ-று.—-பொ-ள,மூத்திரத்தில் உதிரமானது காணப்பொருந்துமானல் மேகரோகமும்மகாரோகங்களும் உண்டாமென்று நித்தியநாதீயமென்னும் சாஸ்திரமானதுசொல்லும். (௫௬)

சுரப்பிணி நீர்நிறக்குறி.

சுரப்பிணியரிசனத்தோயங்காட்டு மே.

இ-ள், சுரப்பிணி-சுரநோயானது - அரிசனம்- மஞ்சள் நிறம்பொருந்திய - தோயங்காட்டும்-நீரினைக்காண்பிக்கும்-எ-று.——பொ-ளா, சுரநோயானது மஞ்சள் நிறம்பொருந்திய நீரினைக்காட்டும். (௫எ)

அசாத்திய நீர்நிறக்குறி.

சுரமேனுமேகத்துனியேனுமிருக்கி ற்
பெருகியமூத்திரம்பிரிக்குமுயிரை யே,

இ-ள், சுரமேனும்-சுரவியாதியானுலும்-மேகத்துனியேனும்-மேகவியாதியானுலும் - இருக்கில்-கண்டிருக்கும்போது-பெருகியமூத்திரம்-அதிகரிக்கும் மூத்திரமானது-பிரிக்கும் உயிரையே-உயிரைப் பிரித்துவிடும்-எ-று.

பொ-ளா, சுரவியாதி யாவது மேகவியாதி யாவது-கண்டிருக்கும்போது அதிகரித்த நீரானது உயிரைப்பிரித்துவிடும். (௫அ)

நோயணுகாவிதி.

நிதந்தினக்கிரம நெறிசென்ருெழுகி ற்
சுதங்காணுராய்ச்சுகித்துறைவா ரே.

இ-ள், நிதம்-நாள்தோறும்-தினக்கிரமநெறி-தினக்கிரமாலங்காரமென்னுஞ் சாத்திர முறைமைப்படி-சென்

ருெழுகின்-நடந்தால்-சுதங்காணுராய்-அழிவுகாணுதவர்களாய்-சுகித்துறைவார்-சுகத்துடன்வாழ்வார்கள்-எ-று.

பொ-ரை, நாள்தோறுந் தினக்கிரமாலங்கார மென்னுஞ்சாஸ்திரத்தின் முறைமைப்படி நடந்தால் அழிவு காணுமல் சுகத்துடன்வாழ்வார்கள் என்பதாம். (ருகூ)

மதாந்தரமும், நீர்நிறக்குறியும்

முற்றியது.

சிவசுப்பிரமணியர் துணை.

உ

கணபதிதுணை.

சிவசுப்பிரமணியர்துணை.

தேரையர் அருளிச்செய்த
நெய்க்குறிச் சாஸ்திரம்.
மூலமும் உரையும்.

கடவுள்வணக்கம்.

ஐக்குறிகொடுவடவானிழலமர்ந்தோர்
கைக்குறிதெரித்தநங்கடவுளைத்துதித்தே
மெய்க்குறிநிறந்தொனிவிழிநாவிருமலங்
கைக்குறிமுழுவதூஉங்கற்றோர்தம்மினும்
பொய்க்குறிமெய்க்குறிபுகலுமெவர்க்கு
நெய்க்குறியதனையிந்நிலத்துரைப்பாம்.

இ-ள், ஐக்குறிகொடு - தட்சிணாமூர்த்தங்கொண்டு - வடவானிழல் அமர்ந்து - ஆலமரத்தின்கீழ் வீற்றிருந்து - ஓர்கைக்குறி - ஒருகைக்குறியினாலே - தெரித்த - நால்வர்க்குத் தெரிவித்த - நங்கடவுளைத் துதித்து - நமது கடவுளாகிய பரமேசுரனைத் துதிசெய்து - மெய்க்குறி - உடற்குறி - நிறம் - சரீரவன்னக்குறி - தொனி - கண்டத்தொலிக்குறி - விழி - கண்களின்குறி - நா - நாவின்குறி - இருமலம் - மலமூத்திரங்களின் குறி - கைக்குறி -

கையில் நாடிக்குறி-முழுவதூஉங்-என்னு மிந்த அஷ்ட விதபரீக்ஷைகளை முழுமையும்-கற்றூர் தம்மினும்-கற்றுணர்ந்தவர்களினும்-எவர்க்கும் -யாவர்க்கும்-பொய்க்குறி-பொய்க்குறியினையும்-மெய்க்குறி-மெய்க்குறியினையும்-புகலும்-சொல்லுகின்ற-நெய்க்குறியதனை-எண்ணெய்க்குறியை-இந் நீணிலத்துளைப்பாம்-பெரிதாகிய இவ்வுலகத்தில் சொல்லுவாம்-எ-று.—பொ-ளை, தட்சிணமூர்த்தங்கொண்டு(ஆலமரத்தினிழலில்வீற்றிருந்துஒரு கைக்குறியினலே)நான்கு முனிவர்களுக்கும் உண்மைப்பொருளைத்தெரித்த நம்முடைய கடவுளைத் துதிசெய்து உடற்குறி - உடனிறக்குறி - கண்டத்தின் ஒலிக்குறி-கண்களின்குறி - நாவின்குறி-மலமூத்திரங்களின் குறி-கைக்குறி - என்னு மிந்த அஷ்டவித பரீக்ஷைகளையுங் கற்றுணர்ந்தவர்களைப் பார்க்கிலும் யாவர்க்கும் பொய்க்குறிமெய்க்குறிகளைச் சொல்லுகின்ற நெய்க்குறியைப் பெரிதாகிய இவ்வுலகத்தாருக்குச்சொல்லுவாம்-என்பதாம்.—கருத்து - கற்றறிந்த வைத்தியன் ரோகத்தின் அசாத்தியத்தைப் பிணியாளனுக்கும் அவனுடைய சுற்றத்தாருக்கும் தெரியப்படுத்த லாகாதென்ற முறைமையைப்பற்றி மறைத்துச்சொன்னலும் இந்தச்சாஸ்திரம் அவைகளைச் சொல்லிவிடும் என்பது பற்றிப் (பொய்க்குறி மெய்க்குறி) யென்றூர். (க)

சோதனோதகவிலக்கணம்.

நிறக்குறிக்குரைத்தநிருமாணநீரி ற்
சிறக்கவெண்ணெய்யோர்சிறுதுளிநடுவிடு த்
தென்றுறத்திறந்தொலியேகாதமைத்த தி
னின்றதிவலைபோநெறிவிழியறிவு ஞ்
சென்றதுபுகலுஞ்செய்தியையுண ரே.

இ-ள். நிறக்குறிக்கு-நிறக்குறிக்காக-உரைத்த-மேற் சொல்லிய-நிருமாணநீரில்-நிர்னயப்படிவருகின்ற மூத் திரத்தில்-சிறக்க-சிறப்புற - எண்ணெய்யோர் சிறுதுளி நடுவிடுத்து-நடுவே ஒரு துளி யெண்ணெய் விடுத்து-என்றுற - சூரியகிரணம்படும்படி-திறந்து-திறந்து-ஒலி யேகாதமைத்து - காற்று செல்லாதவிடத்தில் வைத்து-அதில் - அதனிடத்தில் - நின்றதிவலை - நின்றதுளியா னது-போம் நெறி-செல்லும் வழியே-விழி- கண்களையு ம்- அறிவு-புத்தியையும்-சென்று-செலுத்தி - அதுபுக லும்-அந்தநெய்க்குறிசொல்லுகின்றசெய்தியை-உணர்-அறிந்துகொள்-எ-று. பொ-ள, நிறக்குறிக்காக மேற் சொல்லியநிர்னயப்படிவருகின்றநீரினடுவில் ஒருசிறுது ளிநல்லெண்ணெய்வி டுச்சூரியகிரணம்படும்படித்திற ந்துகாற்றுசெல்லாதவிடத்தில்வைத்து அத்துளிபோம் வழியிற்கண்களையும்அறிவையுஞ்செலுத்தி அந்நெய்க்கு றி சொல்லுகின்ற செய்தியை அறிந்துகொள்க - எ-ம்.

வாதக்குறியிலக்கணம்.

அரவெனநீண்டிடினஃதேவாத ம்

இ-ள், அரவென - பாம்பைப்போல - நீண்டிடின்- நீளுமானல் - அஃதே-அந்நீரோ - வாதம்- வாயுவினலு ண்டானதாம் - எ-று.——பொ-ள, நீரினடுவில் ஒரு துளிநல்லெண்ணெய்விட்டால் அது பாம்பைப்போல நீளுமாகில் வாயுவினலுண்டான நீராம். (௩)

பித்தக்குறியிலக்கணம்.

ஆழிபோற்பரவினஃதேபித்த ம்.

இ-ள், ஆழிபோல்-மோதிரம்போல - பரவில் - பரவு மானல் - அஃதே - அந்தநீரோ - பித்தம் - பித்தமாம் எ-று.——பொ-ள,நீரில்விட்ட எண்ணெய்த்துளியா னது மோதிரம்போலப் பரவுமானல் அது பித்தத்தின லுண்டானநீராம். (௪)

கபக்குறியிலக்கணம்.

முத்தொத்துநிற்கின்மொழிவதென்கப மே.

இ-ள், முத்து - முத்தினை-ஒத்து-ஒப்பாய் - நிற்கின்- நிற்குமாகில் - மொழிவது என்-சொல்ல வேண்டுவதெ ன்ன-கபமே-அது கபத்தினலுண்டானநீராம்-எ-று — பொ-ள, மூத்திரத்தில் விட்ட எண்ணெய்த் துளி யானது முத்துப்போல நிற்குமானல் கபத்தினலுண் டான நீரென்றுசொல்லவேண்டுவது-என்பதாம். (ரு)

தொங்தக்குறி யிலக்கணம்.

அரவிலாழியுமாழியிலரவு ம்
அரவின்முத்துமாழியின்முத்து ந்
தோற்றிற்றொங்தத்தோடங்களா மே.

இ-ள், அரவில் - முன்சருப்பத்தைப்போற் கண்ட குறியின்மத்தியில்-ஆழியும்-மோதிரம்போல வட்டமாகவும் - ஆழியில் மோதிரம்போல வட்டமாகக்கண்ட குறியில்-அரவும் - பாம்பைப் போலவும்-அரவின்முத்தும் - முன் தனியேகண்ட சர்ப்பக்குறியில் முத்தைப் போலவும் - ஆழியின் முத்தும் - முன்தனியே கண்ட மோதிரக்குறியின் மத்தியில்முத்தைப்போலவும்- தோற்றில் - தோற்றுமானல் - தொங்தத்தோடங்களாம்- இரண்டிரண்டாகத் தொங்கித்ததோடங்களாம்-எ-று—

பொ-ள், சர்ப்பத்தில் மோதிரமும் - மோதிரத்தில் சர்ப்பமும் - சர்ப்பத்தில் முத்தும்-மோதிரத்தில் முத்துந்தோன்றுமானல் - இரண்டிரண்டாகத் தொங்கித்த தோடங்களாம். (௬)

திரிதோடக்குறியிலக்கணம்.

அழுந்துநெய்த்துளியதுவுமும்மலத் தி
லெழுந்தகுறிகளெல்லாமொன்றி ற்
றோற்றுவதும்முத்தோடமென்றுன் னே.

இ-ள். அழுந்தும் நெய்த்துளியதுவும் - நீரில்விட்ட வுடன் அழுந்துகின்ற எண்ணெய்த்துளியும் - மும்மல த்தில்-வாதபித்த சிலேஷ்மநீர்களில்-எழுந்த குறிகளெ ல்லாம்-உண்டான குறிகளெல்லாம்-ஒன்றில் இந்த ஒன் றிலேயே-தோற்றுவதும்-காணப்படுவதும்-முத்தோட மென்று-திரிதோஷமென்று-உன்-நினைப்பாயாக-எ-று.

பொ-ள், எண்ணெய்த் துளியானது நீரில் விட்ட வுடன் அழுந்துவதும், முற்கூறிய வாதபித்த சிலேஷ் மங்களில் தனித்தனியுண்டான குறிகளெல்லாம் இந்த ஒன்றினிடத்திலேயேகாணப்படுவதும், திரிதோடமாம்.

சாத்தியநெய்க்குறியிலக்கணம்-

விருத்தப்படிவமுந்தரித்துப்பாவலு ந்
தெரித்தநெய்க்குறிக்கினிவருத்தமென்னுலகீ
ராங்கப்பரவல்போனீங்குமெப்பிணியு மே.

இ-ள், விருத்தப்படிவமும் - வட்டவடிவும்- தரித்து ப்பரவலும் - மெல்லெனப் பொறுத்துப் பரவுதலும்- தெரித்த - காண்பித்த - நெய்க்குறிக்கு - எண்ணெய்க் குறிக்காக - இனி வருத்தமென் - இனிவருத்தமென்ன- உலகீர்-உலகத்தவர்களே - ஆங்கப்பரவல்போல் - விட் டவிடத்திலேயிராமல் அது மெல்லெனப்பரவினவாறு போல - நீங்கும் எப்பிணியும் - எல்லாவியாதியும் பொறுத்து நீங்கிவிடும்-எ-று.——பொ-ள், வட்டவடி.

வும்மெல்லெனப்பரவுதலும் காண்பித்த எண்ணெய்க்குறிக்காக உலகத்தில் இனி வருத்தமென்ன எண்ணெய்யானது விட்டவிடத்தில் இராமல் மெல்லெனப்பரவினதுபோல எவ்விதநோயும் பொறுத்து நீங்கிவிடும். (அ)

இதுவுமது.

அரிவாகுநத்தையரியாதனத் தை
யறிதருகுறியான்மறுவின்றுயிர்க் கே.

இ-ள், அரி - விஷ்ணுவினுடைய - வாகு - இடப்பாகத்தி லிருக்கும் - நத்தை - சங்கினைப்போலவும் - அரியாதனத்தை - சிங்காதனத்தைப்போலவும் - அறிதருகுறியால்-காணப்படுகிற குறியினால் - உயிர்க்கு-உயிர்களுக்கு - மறுவின்று - குற்றமில்லை-எ-று.

பொ-ள், விஷ்ணுவினுடைய இடக்கரத்திலிருக்கிற சங்கினைப்போலவும், சிங்காதனத்தைப்போலவும், காணப்படுகிற குறியினால் உயிர்களுக்குக் குற்றமில்லை. (கூ)

இதுவுமது.

நாணயச்சத்தியைவீணையைக்காணி னே
நாகுயிருடல்விடுத்தேகினுமீளு மே.

இ-ள், நாணயச்சத்தியை-நாணயமுள்ள குடைபோலவும்-வீணையை -, வீணையைப்போலவுங் - காணினே-காணப்படுமாகில்-நாகுயிருடல் விடுத்து-ஒருதன்மைத்

தாகிய உயிரானது உடலைவிடுத்து - ஏகினும்-நீங்கிவிட்டாலும் - மீளும்-மறுபடி அவ்வுடலில் சேரும்-எ-று.

பொ-ள், நாணயமுள்ள குடைபோலவும் வீணையைப்போலவும் காணப்படுமாகில் ஒருதன்மைத் தாகிய உயிரானது உடலைவிட்டு நீங்கினாலும் மறுபடி அவ்வுடலில் வந்து சேரும் என்பதாம். (௬0)

இதுவுமது.

முல்லையரும்புமுளரிப்பூவு ஞ்
சொல்லியதுளியுட்டோற்றிடுமாயி ன்
இல்லையில்லைநோயென்பதுசரத மே.

இ-ள், முல்லையரும்பும் - முல்லையரும்பு போலவும்-முளரிப்பூவும் - தாமரை மலர்போலவும் - சொல்லிய துளியுள்-முன்சொல்லிய துளியினிடத்தில்-தோற்றிடுமாயின் - காணப்படுமானல் - இல்லை யில்லைநோயென்பது-வியாதி யில்லை யில்லையென்று சொல்வது - சரதமே - உண்மையே-எ-று.——பொ-ள், முல்லை யரும்பினைப்போலவும் - தாமரை மலரைப்போலவும் - எண்ணெய்த் துளியினிடத்தில் காணப்படுமானல் வியாதியில்லையென்றுசொல்வதுசத்தியம், கருத்து-அப்போது வியாதியிருந்தாலும் உடனே நீங்கிவிடுமென்பது தோன்ற (இல்லையில்லையென) இரட்டித்துக்கூறினர். (௬௧)

சாத்தியக்குறி முற்றியது.

அசாத்தியக்குறி யிலக்கணம்.

எண்ணெய்விடிற்சரேலெனப்பொங்கிப்பரவி ற்
றிண்ணமப்பிணிக்குச்சிகிச்சையிங்கின் றே.

இ-ள், எண்ணெய்விடில் - நீரில் எண்ணெய்யை விட்டஅளவில் - சரேலெனப் பொங்கிப்பரவில் - சரே லென்றுமேலே பொங்கிப்பரவுமானல் - திண்ணம்- நிச்சயமாக- அப்பிணிக்கு-அந்தவியாதிக்கு - சிகிச்சை- பரிகாரம்-இங்குஇன்று - இவ்வுலகத்தில் இல்லை-எ-று.

பொ-ரை, நீரில் யெண்ணெயை விட்டவுடன் சரே லென்று பொங்கிப் பரவுமானல் அந்த வியாதிக்குப் பரிகாரம் இவ்வுலகத்தில் இல்லை. இது நிச்சயம். என் பதாம்.——சுபாவதேகிகளுக்கும் காலவிந்நியாசத்தி ஞலும் போசனவிந்நியாசத்தினலும் அவுஷதவிந்நி யாசத்தினலும் இந்தக்குறிகாண்பதுண்டு. ஆகையால் ஒருதரம் பார்த்தமட்டில் அசாத்தியமென்று கருதா மல் பலதரமும் பார்த்து நிச்சயிக்கவேண்டுமென் பது விளங்க (இன்றென) வாளாகூறுது. (இங்கு இன் றென) விசேஷித்துக் கூறினர். (௧௨)

இதுவுமது.

விடுதுளிசிதறிவெவ்வேறுன்றும ற்
கடுகெனப்பரவிற்கைவிடன்முறை யே.

இ-ள், விடுதுளிசிதறி - நீரில்விட்ட எண்ணெய்த் துளியானது சிதறி-வெவ்வேறு ஒன்றுமல்- ஒன்றுபடா

மல் வெவ்வேருகி - கடுகுஎன-கடுகுகள்போல-பரவில்-பரவுமானல் - கைவிடன்முறை-கைவிடுதல் முறைமையாம்-எ-று.—பொ-ள், நீரில்விட்ட எண்ணெய்த்துளியானது ஒன்றுபடாமல் சிதறிக்கடுகுகள்போல வெவ்வேருய்ப்பரவுமானல் அச்சிகிச்சையைக்கைவிடுவதே முறைமையாம். (௰௩)

இதுவுமது.

அவியுமூத்திரமுமணந்தொன்றின் வி
யவியுமென்றல்கவுதமரறை யே.

இ-ள், அவியும் - எண்ணெய்த்துளியும் - மூத்திரமும்-நீரும் - அணைந்து-சேர்ந்து-ஒன்றின் - ஒன்ருகக் கலந்துவிடுமானல்-ஆவி-உயிரானது - அவியுமென்றல்-நீங்குமென்பது - கவுதமர் அறையே-கவுதம ரிஷியின் வாக்கியமாம்-எ-று.—பொ-ள், எண்ணெய்த்துளியும் மூத்திரமும் ஒன்ருகச்சேர்ந்து கலந்துபோமானல் உயிர்நீங்குவிடுமென்பது கவுதமர்வாக்கியமாம். (௰௪)

இதுவுமது.

ஓதுநெய்த்துளியுள்ளழுந்திற்றீதெ ன
மாதவகற்பமன்னப்பயிலு மே.

இ-ள், ஓது நெய்த்துளி - சொல்லிய எண்ணெய்த்துளியானது - உள்ளழுந்தில் - மூத்திரத்துக்குள் அழுந்திவிடுமானல் - தீதென - அந்தநீர் தீதானதென்று-

மாதவகற்பம் - மாதவகற்பமென்னும் வைத்திய சாஸ்திரமானது - மன்னப்பயிலும்- உறுதியாகச் சொல்லும்-எ-று.—பொ-ளை, சொல்லிய எண்ணெய்த்துளியானது மூத்திரத்துக்குள் அழுந்தி விடுமானல் கெடுதியானதென்று மாதவகற்பமென்னும்வைத்தியசாஸ்திரமானது உறுதியாகச் சொல்லும். (யரு)

இதுவுமது.

அம்புகட்கம்முசலஞ்சூலமொடுவா ள்
கும்பம்வெள்ளிலையெனக்குறிபடிற்றீ தே.

இ-ள், அம்பு - பாணம் - கட்கம் - வாளாயுதம்-முசலம்-இருப்புலக்கை-சூலம்-சூலாயுதம்- வாள்-ஈர்வாள்-கும்பம்-குடம்-வெள்ளிலை-வெற்றிலை- என-என்றுசொல்லுமிவைகள்போல-குறிபடில்-அடையாளந்தோற்றுமானல் - தீது - தீங்காகும்-எ-று.—பொ-ளை, பாணம்-வாளாயுதம் - இருப்புலக்கை - சூலாயுதம் - ஈர்வாள்-குடம்-வெற்றிலை-என இவைகள்போலக் குறிபொருந்திருல் அசாத்தியமாகும். (யசு)

இதுவுமது.

எருதறுகிளாளமிபம்புலிமறிய ரி
நரனரவமுங்குடமண்ணரிமற்கடங்கர ம்
பூசைதேளிவற்றைப்பொலுருத்தோற்றி ற்
பேசுவதென்னைப்பிணிதணியா வே.

இ-ள், எருது-இடபம்-அறுகு-சிங்கம்-இயாளம்-ஆளி-இபம்-யானை-புலி-வேங்கை-மறி-ஆடு-அரி-பன்றி-நரன்-மனிதன் - அரவு-சர்ப்பம்-அழுங்கு-ஆமை-புள்-பக்ஷி-நரி-நரி-மற்கடம்-குரங்கு-கரம்-கழுதை - பூசை-பூனை-தேள்-தேள்-இவற்றைப்போல்-இவைகளைப்போல-உரு-குறியானது - தோற்றில் - காணப்படுமானல்-பேசுவது என்னை - அதைக்குறித்துச்சொல்லவேண்டுவதென்ன விருக்கின்றது - பிணிதணியா-அந்த வியாதி சாத்திய மாகாது-எ-று.—பொ-ள, எருது-சிங்கம்-ஆளி-யானை புலி-ஆடு-பன்றி-மனிதன்-பாம்பு - ஆமை-பக்ஷி-நரி-குரங்கு-கழுதை - தேள் - இவைகளைப்போல் குறியானது காணப்படுமானல், அந்தவியாதி சாத்தியமாகாது.(௰௭)

சாத்தியாசாத்தியநெய்க்குறியிலக்கணம்.

சல்லடைக்கண்போற்றனித்தனித்துவாரமாய் ச
சொல்லுமுனற்றிடிற்றொட்டலென்கரமென க
கவுதமருரைப்பினுங்கபத்தாற்கண்படு ந
தவியாவணங்கதுசாத்தியமென்ப ரே.

இ-ள், சல்லடைக்கண்போல்-சல்லடைக்கண்போல-தனித்தனி-வெவ்வேறே-துவாரமாய்-துவாரமுள்ளதாய் சொல்லுமுன்-சொல்லுதற்குமுன்- அற்றிடில்-அற்றுப் போனல் - தொட்டலென்கரமென (பிணியாளனுடைய)

கையைத் தொடவேண்டியதென்னென்று-கவுதமர்-கவு
த்மரிஷியானவர் - உரைப்பினும்-சொல்லியிருக்கினும்-
கபத்தால் - கபச்சேர்க்கையினால் - கண்படும் - துவார
முண்டாகும். (ஆதலால்) தவிபா அணங்கது-கெடுதியி
னையேசெய்யாத அந்தரோகமானது - சாத்தியம் என்
பரோ- சாத்தியமென்று நூலோர் சொல்லுவர்-எ-று.—

பொ-ள், சல்லடைக்கண்போல் வெவ்வேறாய்த்
துவாரமுள்ளதாய் - துவாரம் விழுந்ததென்று சொ
ல்லுதற்குமுன் அற்றுப்போனால் அந்தப்பிணியாளன்
கையைத்தொடவேண்டுவதில்லையென்று கௌதமரிஷி
சொல்லியிருந்தாலும், அது, கபச்சேர்க்கையினாலுண்
டாகின்றதாதலால் கெடுதியினையே செய்யாது சாத்தி
யமென்று நூலோர் சொல்வர். (யஅ)

கருமசாந்தியின் பயன்.

கருமநோயிவையெலாங்கண்ணுதலளித்தரு ள்
கருமகாண்டக்கடன்கண்டவ்வவற் றை
யொழித்துயர்மருந்துணினும்பனைப்போல ச்
செழித்துநாற்பொருளுஞ்சேரவாழ்குவ ரோ.

இ-ள், கருமநோயிவையெலாம் - இவ்வியாதிகளெல்
லாம் பூர்வகருமங்களால் உண்டாகும் வியாதிகளாம்-
(ஆதலால்) கண்ணுதல்-நெற்றிக்கண்ணையுடைய பரம

சிவன் - அளித்தருள் - அருளிச்செய்த-கருமகாண்டக் கடன்கண்டு - கருமகாண்டமென்னுஞ் சாத்திரத்திற் சொல்லப்படுகிற முறைமையை- ஆராய்ந்து-அறிந்து- அவ்வவற்றை - அந்தந்தக்கருமங்களை-ஒழித்து - நீக்கி- உயர்மருந்து - உயர்வாகிய ஔஷதத்தை - உண்ணின்- கிரமமாக உண்டால்-உம்பரைப்போல - தேவர்களைப் போல - செழித்து - நரைதிரை மூப்புகளில்லாமல் செழுமையடைந்து-நாற்பொருளும் - அறம்-பொருள் இன்பம் - வீடு - என்னும் நான்குபொருளும் - சேர- பொருந்த - வாழ்குவர் - வாழ்வார்கள்-எ-று.

பொ-ரை, இவ்வியாதிகளெல்லாம்-பூருவகருமங்களால் உண்டாகும் வியாதிகள் ஆதலால், பரமசிவன் அருளிச் செய்த கருமகாண்டமென்கிற சாஸ்திரங்களிற் சொல் லுமுறையை ஆராய்ந்தறிந்து அந்தந்தக் கருமங்களை ஒழித்து கைபாகம் செய்பாகம் அமைந்த உயர்வான அவுஷதத்தை உண்டால் தேவர்களைப்போல் நரை திரை மூப்புகளில்லாமல் செழுமையுடையவர்களாய் அறமுதலிய பொருள்கள்சேர வாழ்வார்கள். (௰௯)

…DAMBARANATHA MUDALIAR… JUN 1914

நெய்க்குறிச்சாஸ்திரம்

முற்றியது.

ஆக சூத்திரம் - ௭௰அ.

உ

கணபதிதுணை.

சிவசுப்பிரமணியர்துணை.

பெயர் அகராதி.

பெயர்.	பக்கம்.
அ	
அசாத்தியநீர்	௨௫
அசாத்தியநீர்நிறக்குறி	௫௯
அசாத்தியநெய்க்குறி-சூ-சூத்திரம்-	௪௯
அதிஉட்டணநீர்	௮
அதிகஉதிரம்பொங்குதலாலுண்டாகும் நீர்	௰
உ	
உட்டணரோகநீர்	௨௮
உட்டணத்தைக்கொடுக்குநீர்	௭
[illegible]டணமிகுதியாலுண்டாகுநீர்	௭
உதிரக்கெடுதிநீர்	௰௫
உதிரத்தழுக்கைக்காட்டுநீர்	௰௬
உதிரமிகுதியாலுண்டாகுநீர்	௨௮
உ	
உதிரம்பொங்கியநீர்	௯
உப்புறையாதநீர்	௨௧
க	
கடவுள்வணக்கம்	௧
கடவுள்வணக்கம்	௪௧
கபக்குறியிலக்கணம்	௪௬
கபத்தைஇளக்குகிறநீர்	௨௫
கபத்தைத்தருநீர்	௨௧
கபப்பிணி நீர்நிறக்குறி	௫௭
கருப்பத்தில்விரணமுண்டாகும் நீர்	௨௰
கருமசாந்தியின்பயன்	௫௫
கருமைநிறநீர்விகற்பம்	[illegible]௬
கா	
காமாலைநீர்	௫௨
காமாலைநீர்நிறக்குறி	௫௬
காமாலைநோயைத்தருநீர்	௰௫

பெயர்.	பக்கம்.
கு	
குண்டிக்காய்த்துர்ப்பல நீர்	௨௨
ச	
சந்நிபாதத்தைத்தருநீர்	௨௧
சீரபசைக்கெடுதிநீர்	௩௰
சா	
சாத்தியநெய்க்குறி ச-குகித்ரம்-	௪௯
சாத்தியாசாத்தியநெய்க் குறி	௫௨
சி	
சிலேஷ்மத்தின்கொதிப் பாலிறங்குநீர்	௰௯
சீ	
சீதளதேகிகளுக்குண் டாகு நீர்	௨௬
சீதளநீர்	௰௧
சீரணஅபக்குவநீர்	௬
சீரணபக்குவநீர்	௭
சு	
சுக்கசீதளநீர்	௰௮
சுபாவதேகிக்குறிநீர்	௨
சுபாவநீர்	௨௬
சுரப்பிணிநீர்நிறக்குறி	௩௯

பெயர்.	பக்கம்.
செ	
செம்மைநிறநீர்விகற்பம்	௯
சோ	
சோதனைதகவிலக்கண	௪௩
தி	
திரிதோடக்குறியிலக்க	௪௫
தொ	
தொந்தக்குறியிலக்கண	௪௫
தொந்தப்பிணிநீர்நிறக்கு	௩௭
நி	
நிறத்தொகை	௫
நீ	
நீரின்பொதுக்குணம்	௪
நு	
நுரையிலக்கணம்	௩௧
நோ	
நோயணுகாவிதி	௩௯
நோய்த்தேகிக்குறிநீர்	[illegible]
ப	
பச்சைநிறநீர்விகற்பம்	௧௧
பா	
பாண்டுரோகநீர்	௩[illegible]
பி	
பித்தக்குறியிலக்கணம்	௪௨

பெயர்.	பக்கம்
பி	
பித்தசுபாவகுணக்கெடுதி நீர்	௨௯
பித்தநீர்நிறக்குறி	௩௬
பித்தப்பிணிநீர்நிறக்குறி	௩௫
ம	
மகாரோக நீர்நிறக்குறி	௩௮
மஞ்சள் நீர் விகற்பம்	௯
மி	
மிகுசீதளநீர்	௰௨
மு	
முன்னிலும்அதிஉட்டினநீர்	௮
முன்னிலும்அதிகமாகப் பொங்குதலா லுண் டாகும் நீர்	௰
மூ	
மூத்திரத்தில் வாயுகலக் கும் நீர்	௩௧
மூத்திரப்பை நாளப்புண் ணீர்	௨௭
மூத்திரப்பை வித்துஸ்தான தர்ப்பலநீர்	௨௪

பெயர்.	பக்கம்.
மே	
மேகரோகநீர்நிறக்குறி	௩௮
மேற்கூறியமும்மலங்களை மிகவுங்கெடுக்குநீர்	௰௪
வா	
வாதக்குறியிலக்கணம்	௪௪
வாதசிலேஷ்மக்கெடுதி நீர்	௰௬
வாதபித்தகபங்களைக்கெ டுக்குநீர்	௰௩
வாதப்பிணிநீர்நிறக்குறி	௩௪
வாத முதலிய மூன்றுங் குறையுநீர்	௩௨
வி	
விடத்தாலுண்டாகுஞ் சீதளநீர்	௰௧
வெ	
வெண்மைநிறநீர்விகற்ப	௰௭
வெப்பநீர்	௨
க்ஷ	
க்ஷயநீர்	௰௯

பெயர் அகராதி

முற்றியது.